1967 மார்ச் 25] [திரு. டி. மார்ட்டின்]

பாதியைப் பற்றி எண்ணும்போது, அங்கத்தினர்கள் தங்கள் சம்பளத்தை 100 ரூபாயாகக் குறைத்துக்கொண்டால், 250 ரூபாயாக எங்கள் சம்பளத்தைக் குறைத்துக்கொள்வோம் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். அப்படிக் கூறினால், நான் இந்தச் சபையில் கூறிக்கொள்ளுவது என்னவென்றால், அன்று நீங்கள் கொடுத்த உறுதி மொழியில் எந்தவிதமான நிபந்தனையோ, ப்ரொவைசோவோ, ரைடர் க்ளாசோ இல்லாத நிலையில் நேரடியாக விலைவாசியைக் குறைக்கும் வரையில் சம்பளம் இல்லாமல் மந்திரிப் பதவி வகிப்போம் என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள். அப்படிக் கூறிவிட்டு இப்போது . . .

3. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) பேரவையில் பேசும் முறை.

திரு. இராம. அரங்கண்ணல் : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், ஏற்கெனவே சபாநாயகராகிய தாங்கள் தெரிவித்திருக்கிறீர்கள், உறுப்பினர்கள் பேசுகிற நேரத்தில் " நீங்கள் ", " நீங்கள் " என்று கூறினால் அது உங்களைக் குறிப்பிட்டுப் பேசுவதாக ஆகும் என்று சொல்லியிருக்கிறீர்கள். கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில் " நீங்கள் " என்று உங்களைப் பார்த்துச் சொல்லு கிறார்கள். அதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கக் கூடிய ஒழுங்குப் பிரச்சினை சரியானது. மதிப்பிற் குரிய உறுப்பினர்கள் பேசும்போது " நீங்கள் " என்று குறிப்பிட் டால் அது இந்த அவைத் தலைவரைத்தான் குறிக்கும். உறுப்பினர்கள் பேசும்போது அவைத் தலைவரிடமே பேசவேண்டும். முதலமைச்சரையோ, மற்ற அமைச்சர்களைப்பற்றியோ பேசும் போது, முதலமைச்சர் என்றோ, இன்ன அமைச்சர் என்றோ குறிப்பிட்டுப் பேசவேண்டும்.

2. 1966–67-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் துணை அறிக்கை—பொது விவாதம்—(தொடர்ச்சி).

திரு. டி. மார்ட்டின் : அவைத் தலைவர் அவர்களே, ஆகவே, இந்தச் சம்பளக் குறைப்பு முடிவை அவர்களே உடனே எடுத்திருக்க முடியும். அமைச்சரவையிலிருந்து அந்த விதமான முடிவு வரும் என்று எதிர்பார்த்திருந்தேன். ஆனால், அந்த விதமான முடிவு வரவில்லை. அதற்குப் பதிலாக அங்கத்தினர்கள் தங்கள் சம்பளத் தைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று கூறியிருப்பது, அதை ஒரு ** நேர்மையான பதிலாகக் கருத முடியாது என்று சபை யில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன் . . .

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.